**வாக்குமூலம்**
**குற்றவியல் நடுவர் நீதிமன்றம், அறந்தாங்கி**
**வழக்கு எண். CC 57/2023**
**வழக்கு சாட்சி. ம.சா.1**

| | | | |
|---|---|---|---|
| **பெயர்:** | தனலெட்சுமி | **ஜாதி:** | |
| **தந்தை பெயர்:** | மாரிமுத்து | **தொழில்:** | |
| **கிராமம்:** | | **சமயம்:** | |
| **தாலுக்கா:** | அறந்தாங்கி | **வயது:** | 44/2025 |

**Solemnly affirmed in accordance with the provisions of oaths Act, 1969 (Act 44 of 1969)**

**09.05.2025**
**எதிரி ஆஜரில்லை.**
**முதல் விசாரணை:**

நான் இம்மனுவில் மனுதாரராவேன். நான் எதிரி மீது மதிப்பு மறுக்கப்பட்ட காசோலையின் மீது இவ்வழக்கை தாக்கல் செய்துள்ளேன். எனது தரப்பு முதல் விசாரணையை நிரூபண வாக்குமூலமாக தாக்கல் செய்துள்ளேன். என் தரப்பில் **ம.சா.ஆ.1 முதல் 6** வரையிலான ஆவணங்களை குறியீடு செய்துகொள்ள வேண்டுகிறேன்.

1) 13.03.2023 ஆம் தேதியிட்ட மணமேல்குடி கிளை இந்தியன் வங்கி காசோலை அசல் (காசோலை எண்.556052) **ம.சா.ஆ–1** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

2) வழக்கு காசோலையை கடந்த 13.03.2023 ஆம் தேதியன்று அறந்தாங்கி கிளை SBI வங்கியில் வசூலுக்காக தாக்கல் செய்ததற்கான சலான் அசல் **ம.சா.ஆ–2** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

3) கடந்த 16.03.2023 ஆம் தேதிய அறந்தாங்கி கிளை SBI வங்கியின் குறிப்பாணை அசல் **ம.சா.ஆ–3** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

4) கடந்த 10.04.2023 ஆம் தேதியன்று எதிரியின் வசிப்பிட முகவரிக்கும், பணியிட முகவரிக்கும் அனுப்பிய வழக்கறிஞர் அறிவிப்பின் அலுவலக நகல் அஞ்சலக ரசீதுகளுடன் **ம.சா.ஆ–4** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

5) புகார்தாரர் எதிரியின் வசிப்பிட முகவரிக்கு அனுப்பிய வழக்கறிஞர் அறிவிப்பை எதிரி கடந்த 11.04.2023 ஆம் தேதியன்று பெற்றுக்கொண்டதற்கான ஒப்புதல் அட்டை அசல் **ம.சா.ஆ–5** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

6) எதிரியின் பணியிட முகவரிக்கு அனுப்பிய வழக்கறிஞர் அறிவிப்பினை எதிரி கடந்த 11.04.2023 ஆம் தேதியன்று பெற்றுக்கொண்டதற்கான ஒப்புதல் அட்டை அசல் **ம.சா.ஆ–6** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

மேற்படி ஆவணங்களை ஏற்று எனக்கு ஆதரவாக தீர்ப்பு வழங்க வேண்டுகிறேன்.

**எதிரிதரப்பு வழக்கறிஞரின் வேண்டுகோளுக்கு இணங்க குறுக்குவிசாரணையானது வேறு ஒரு தேதிக்கு ஒத்திவைக்கப்படுகிறது.**